# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




**மன்னா – 11　　பிப்ரவரி 2022　　பிரதி – 11**



# ஆயர் மடல்



கிறிஸ்து இயேசுவில் அன்பு மிக்கவர்களே! பிப்ரவரி மாத இதழ் வழியாக உங்களை தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

2022-ம் ஆண்டு ஜனவரி மாதம் முழுவதும் நம் அனைவரையும் பாதுகாத்த ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம்.

ஆன்மீக வாழ்வின் அடித்தளம் சட்டங்களிலும் சடங்குகளிலும் மட்டும் நிறைவு காண்பதல்ல, மாறாக மனித மாண்பிற்கும், மனிதநேயத்திற்கும் கரம் நீட்டுவதேயாகும். இதைத்தான் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கற்றுத் தந்தார். அதனை நாம் தொடர்ந்து கடைப்பிடிப்போம்.

நாம் ஒரு கொடிய கால சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கொரோனா நோய்த் தொற்றால் பல நிலைகளில் இழப்புக்களை சந்திக்கிறோம். வேலையில்லா நிலை, பொருளாதார நெருக்கடி, அரசின் அச்சுறுத்தும் சட்டங்கள் இதனால் பாதிப்படைந்துள்ளோம். இந்த நெருக்கடியான சூழல் நீங்க ஜெபிப்போம்.

ஆலய ஆராதனைகள் தடையில்லாமல் நடைபெற தொடர்ந்து ஜெபிப்போம். ஆராதனைகளில் உற்சாகமாய் குடும்பமாக பங்குகொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆலயத்தின் தேவைகள் சந்திக்கப்பட உற்சாகமான காணிக்கைகளை கொடுத்து வருகின்றீர்கள். நன்றி! தொடர்ந்து படைக்கவும்.

விடுமுறை நாட்களில் சொந்த நாடு சென்றவர்கள் தங்கள் பணியிடத்திற்கு திரும்பினவர்களின் பயணத்தில் ஆண்டவர் பாதுகாத்தார். தொடர்ந்து வரும் நாட்களில் வர இருக்கின்றவர்களின் பயண பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

மார்ச் மாத பாலைவன மன்னா தலையங்கம் **“தவக்காலம் ஓர் மாற்றுருவாக்கத்தின் காலம்”** இந்த கருப்பொருளில் எழுத்துக்களை படையுங்கள்.

இறையாசி நம் அனைவரோடும் இருப்பதாக.

**அன்புடன் போதகர்,**
**Rev. S. போவாஸ்**

# மனிதநேயம்

## (லூக்கா 10:25-37)

வாழ்வை முழுமையாக குறைவின்றி வாழ ஒவ்வொரு மனிதனும் முயற்சி செய்கிறான். வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் இந்த முழுமையை நோக்கி பயணம் செய்கிறான். பிறப்பு முதல் இறப்புவரை, கருவறை முதல் கல்லறை வரை இந்த பயணம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. முழு மனிதத்தை நோக்கி பயணம் செய்யாத ஒருவர் மனிதன் என்ற வரையறைக்குள்ளே வர தகுதியற்றவன். இந்த உலகில் முழுமையான நிறைவான வாழ்வை நிலைநாட்ட மனிதநேயம் வேண்டும். லூக்கா 10:25-37 வரையுள்ள பகுதியை மையமாகக் கொண்டு சிந்திப்போம்.

### 1. அவசரத்தில் உதவி:- (லூக்கா 10:33-34)

அவசரமான உலகில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இதில் எவரும் மற்றவர்களுக்கு அதிகமாக உதவிசெய்வது இல்லை. அன்பாக ஒரு வார்த்தை பேசுபவர்களை காண்பதும் அரிதாக உள்ளது. உண்மையான கரிசனைக் கொண்டு மற்றவர்களை விசாரிப்பவர்கள், அன்பு செலுத்தி இரக்கப்பட்டு தேற்றுபவர்கள், நேரத்தையும் காலத்தையும் பிறருக்காக பயன்படுத்துகின்றவர்கள் வெகுசிலரே. லூக்கா 10:25-37 வரையுள்ள இந்த உவமையில் குரு சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்; காயப்பட்ட மனிதனுக்கு அல்ல. லேவியன் தனது சுயநலத்துக்கு முக்கியத்துவம் அளிக்கின்றார்; அடிப்பட்ட மனிதனுக்கு அல்ல. ஆனால் சமாரியன் மனிதநேயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார். நல்ல சமாரியன் காயம்பட்ட மனிதனுக்கு கருணை உள்ளத்தோடு உதவி செய்தார். அவரின் அன்பும், இரக்கமும் நம்முடைய இதயத்தை பிரமிக்க வைக்கிறது. “உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே, இடுக்கண் களைவதாம் நட்பு” என்ற திருக்குறள்தான் நம் நினைவுக்கு வருகிறது. சமாரியனால் ஒருவனின் காயத்திற்கு கட்டுப்போட முடிந்தது என்றால் அவனின் கருணை உள்ளம் ஆழ்கடலை விட ஆழமானது எனலாம். இரக்க குணத்திற்கும், மனித நேயத்திற்கும் இலக்கணம்



வகுத்தவன் அவனே. கருணையுள்ளம் கொண்டவர்களால் மட்டுமே காயத்திற்கு கட்டுப்போட முடியும். இந்த உலகத்தையும் உருமாற்ற முடியும் என்பது நல்ல சமாரியனிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அன்பும், இரக்கமும், கல்லான இதயத்தைக் கூட கரைய வைக்கும்.

இறைவனை அன்பு செய்கிறோம் அவரின் கருணையைக் செயல்படுத்துகிறோமென்றால் நம் பக்கத்தில் பலவீனமாக பாதிக்கப் பட்டிருக்கும் மனிதனுக்கு பாசம் காட்டுகிறோம் என்பதே அர்த்தம். பாதிக்கப்பட்டவனை பலப்படுத்தி, பண்படுத்தி, பக்குவப்படுத்தி, மீண்டும் மகிழ்ச்சியோடு வாழ வைக்கிறோம் என்பதே பொருள். ஆடம்பரத்துக்கும் அர்த்தமுள்ள சடங்குகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துவிட்டு வறுமையாலும், வருத்தங்களாலும் துவண்டுப்போன வறியோர்களின் கண்ணீரோடு நாம் கரையவில்லையென்றால் நமது கிறிஸ்தவ வாழ்வும் பயனற்றதாகவே அமையும். இந்த சிறியரில் ஒருவருக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கும் செய்தீர்கள் என்ற இயேசுவின் கனவு சொல்லில் மட்டுமல்ல வாழ்விலும் அர்த்தம் பெறவேண்டும். நல்ல சமாரியன் அவசரத்திலும் உதவினான்.

## 2. அனைவரும் உதவிசெய்ய வேண்டுகோள்: லூக். 10:29,37

என் அயலான் யார்? என்ற கேள்விக்கு பதில் கொடுப்பதன் வழியாக சட்ட வல்லுநரின் ஆணவத்தை, சுயநலத்தை உணரச் செய்வதோடு, அவன் என்ன செய்யவேண்டும் என்பதை நீயும் அவ்வாறே செய்யும் என்ற வார்த்தைகளின் வழி சுட்டிக்காட்டுகிறார். இயேசு ஆதாயம் தேடுபவர்களையும், விட்டுக்கொடுத்து வாழ மனதில்லாதவர்களையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. உள்ளத்தில் அன்பும், இதயத்தில் இரக்கமும் உள்ளவர்களையே ஏற்றுக்கொண்டார். இயேசு நாதரின் வாழ்வும், மரணமும் அன்புக்கும், இரக்கத்திற்கும் முன் உதாரணமாகும். (கொலோசெயர் 1:20).

நல்ல சமாரியனின் இரக்ககுணத்தை தனது பணிவாழ்வில் செயலாக்கம் செய்தவர் அன்னை தெரசா என்றால் அது மிகையாகாது. அந்த தாயின் முகத்தில்தான் எத்தனை ரேகைகள். அந்த தசை சுருக்கத்தில் கோடி ஏழைகளின் கதை சுருக்கத்தையே வாசிக்கலாம். அவை சுருக்கங்களல்ல இரக்கங்களே; அவரது மூக்கில் சுவாசமட்டுமல்ல இரக்கமும் சேர்ந்தே சுவாசித்தது எனலாம். அழைப்புக்குள் இன்னொரு அழைப்பை ஏற்று ஏழைகளுக்காகவே இரக்கத்தோடு இறுதி மூச்சு வரை உழைத்து ஓடாகிப்போன பூமியின் தேவதை அன்னை தெரசா. இரக்ககுணம் என்பது இயல்பாக வருவது, இழுத்துக்கொண்டு வரப்படுவது இல்லை. இயல்பாக இயற்கையாக வருவது. இரக்க குணமுள்ளவர்கள் மட்டுமே காயத்திற்கு

கட்டுப்போட முடியும். இரக்ககுணம் கல்லான இருதயத்தையும் கரைய வைக்கும்.

இன்று மனிதர்களாகிய நாம் சுயநலம் என்ற சிந்தனையில் பிறரை கண்டுக்கொள்வது இல்லை. உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் இருப்பவர்கள், கைவிடப்பட்ட நிலையில் வாழ்வோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், மாற்றுத்திறன் படைத்தோர் இவர்களை மனிதநேயத்தோடு பார்ப்பதுண்டா? இன்று மனிதநேயத்தை பார்ப்பது என்பது கானல்நீராய் உள்ளது. நாம் நல்ல சமாரியனைப் போன்று ஜாதிகளையும், மதங்களையும் கடந்து மனிதநேயம் கொண்டு வாழ்வோம்.

**அன்புடன் போதகர்,**
**Rev. S. போவாஸ்**

## சிறுவர் பகுதி

### எறும்பும் புறாவும்




ஓடை ஒன்றில் இருந்து தவறி விழுந்துவிட்ட எறும்பு ஒன்று தன் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தது. ஓடைக் கரையிலிருந்து ஒரு மரக்கிளையில் உட்கார்ந்திருந்த ஒரு புறா அந்த எறும்பின் தத்தளிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தது. எறும்புக்காக பரிதாபப்பட்ட புறா ஓர் இலையைக் கொய்து எறும்பின் பக்கமாய் போட்டது. எறும்பு இலையில் ஏறி கரையை அடைந்தது. எறும்பு புறாவுக்கு மிகுந்த நன்றி சொல்லியது.

ஒருநாள் புறா மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது. ஒரு வேடன் புறாவை பார்த்ததும் தன் அம்பை எடுத்து குறிவைத்துப் புறாவை அடிக்க தயாரானான். எறும்பு இதைக் கண்டு பதை பதைத்து ஓடி வேடனின் காலை நறுக்கென்று கடித்துவிட்டது. வேடன் கத்திக்கொண்டே கீழே பார்த்தான். சத்தம் கேட்ட புறா பறந்து போனது. தன்னை காப்பாற்றினது எறும்பு என்று அறிந்து புறா நன்றி செலுத்தியது. நமக்கு ஒருவர் மனிதநேயம் கொண்டு நன்மை செய்தால் அதனை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. நன்றியுணர்வோடு இருக்கவேண்டும்.

**அன்புடன் போதகர்**

## "உன்னத தலைவனை வளர்த்தியவள்"

(யாத்திராகமம் 2:1-10)



மனிதநேயம் குறைந்துபோன உலகில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பல நூறு ஆண்டுகளுக்கு முன் பணமும், அதிகாரமும் படைத்த வல்லமையான சர்வாதிகாரி கொடுங்கோல் அரசன் இருந்தான். தன்னைக் கடவுள் எனக் கூறிக்கொண்டிருந்தான். அவன் தயவு, இரக்கம், நியாயம் எதற்கும் இடம்கொடாத கொடிய அரசனாய் இருந்தான். அரசனின் மகள் எவ்வாறு மனிதநேயம் கொண்டவளாய் காணப்பட்டாள் என்பதைத் திருமறையின் வழியாய் அறிந்துகொள்ளலாம். அவள் பெயர் சொல்லப்படவில்லை. ஆனால் வரலாறு அவளைக் குறித்து சொல்லுகிறது அவள் மனிதநேயம் கொண்டவளாய் எவ்வாறு காணப்பட்டாள் என்பதை யாத்திராகமம் 2:1-10 வரை மையமாகக் கொண்டு சிந்திப்போம்.

### 1. ஆச்சரியப்பட்டாள்:-

தோழிகள் புடைசூழ நைல் நதியில் குளிப்பதற்காக வந்தவள். அழகிய நாணற்பெட்டியைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அதனை எடுத்துவரச் சொல்லி திறந்தபோது உள்ளே அழகிய ஆண் குழந்தை இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். அது எபிரெய குழந்தை என்பதை அறிந்துகொண்டாள். தந்தை தன் சட்டத்தால் நாட்டை கொலைக்களமாக்கிய போதும், மகளோ இரக்கமும், உருக்கமும், மனிதநேயமும் கொண்டவளாயிருந்தாள். பார்வோனின் மகள் குழந்தையின் அவலநிலையை பார்த்தாளேயன்றி, தன் தந்தையின் அரசியல் நிலையை பார்க்கவில்லை. நாணற்பெட்டியில் இருந்த குழந்தையை பார்த்தவள் ஆச்சரியப்பட்டாள்.

### 2. அரண்மனையில் வளர்த்தாள்:-

பிள்ளையின் தாயாகிய யோகெபேத்தின் விசுவாசமும், அரசன் பார்வோன் மகளின் இரக்கம், மிரியாமின் ஞானமுள்ள கிரியை, குழந்தைக்கு ஜீவனையும், பாதுகாப்பையும் தந்தது. கிடைக்கப்பெற்ற தருணத்தை யோகெபேத் நன்கு பயன்படுத்திக்கொண்டாள். தொட்டில் பருவத்திலேயே ஆண்டவரின் தெய்வீக குணங்களை போதனையால் சிறிய முறையில் பதித்துவிட்டாள்.

சில காலத்துக்குப் பின் வளர்ப்புத் தாயிடம் வந்து சேர்ந்த மகனிடம் மிகுந்த பரிவும், பாசமும் காட்டினாள். தன் மகனுக்கு தண்ணீரில் இருந்து எடுக்கப்பட்டவன் என்ற பொருளில் மோசே என்று பெயரிட்டு மகிழ்ந்தாள். தன் சொந்த மகனாக வளர்க்க விரும்பினாள். ஆடம்பரமான சொகுசு நிறைந்த அரண்மனையிலும்கூட தந்தையின் கொடூரமான வன்முறையை வெறுத்து இவள் வளர்த்தியிருக்கலாம். நதியில் இருந்து எடுக்கப்பட்ட குழந்தையை இறுதிவரை பராமரிப்பேன் எனத் தீர்மானித்தாள். அரண்மனையில் மோசே எகிப்தின் சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும், செய்கையிலும் வல்லவனானான். அரண்மனையில் இந்த கற்றல் ஆண்டவரின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. தந்தையின் இசைவையையும், ஒத்துழைப்பையும் வளர்ப்புத்தாய் எப்படிப் பெற்றாள் என நாமறியோம். ஆனால் எடுத்த தீர்மானத்தில் மனஉறுதியும் உண்மையுமாயிருந்தாள்.

மோசே தன் வளர்ப்புத்தாயைவிட்டு ஓடிப்போனதும் வேதனைப்பட்டிருப்பாள். ஆனால் கடவுளின் திட்டத்தின்படி இஸ்ரவேலரை கானானுக்கு நேராய் நடத்தி செல்ல முக்கிய காரணியாவாள். நைல் நதியில் வளர்ப்பு தாயால் மீட்கப்படவில்லையென்றால் மோசே என்பவரை இஸ்ரவேலர் கண்டிருக்க முடியாது. மட்டுமல்ல வீரதீர செயல்கள் புரிய சகல சாஸ்திரங்கள் வளர்ப்புத் தாயால் கற்பிக்கப்பட்டது பெரும் உதவியல்லவா. அவனை அறியாமலே தேவ மனிதனை மீட்பின் ரட்சகனாக உருவாக்கிவிட்டாள். பல தருணங்களில் நாமும் இவ்வாறு செயல்படும்போது கடவுளின் மீட்பின் திட்டத்துக்கு பங்காளிகளாவோம். அன்பானவர்களே! நாமும் அக்கிரமத்துக்கும், அநியாயத்துக்கும் துணைபோகாமல் ஆண்டவரின் நியாயத்தீர்ப்புக்கு பயந்து வைராக்கியமாய் பார்வோன் அரசனின் மகளைப் போன்று நல்ல குணத்தோடு, மனிதநேயத்தோடு வாழ்வோம்.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி. M. R. பெக்ஸிலின் போவாஸ்**

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் **Mr. Ramesh** அவர்களின் தகப்பனார் **Mr. Rathinavel** அவர்கள் ஜனவரி மாதம் 24-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் தகப்பனாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

# இதயம் திறந்தால் இயேசுவைக் காணலாம்



மண்ணில் : 23-04-1827
விண்ணில் : 03-02-1900
ஊர் : ரெட்டியார்பெட்டி
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

வைணவ குடும்பம், சிறந்த தமிழ் பண்டிதரின் மகனாகப் பிறந்தார் கிருஷ்ணப்பிள்ளை. சிறுவயதிலேயே வைணவ நூல்கள் அனைத்தையும் மனப்பாடமாகக் கற்றுத் தேறினார். வைணவ சமயத்தின் தீவிர பக்தனாய் மாறினார். கிருஷ்ணப்பிள்ளைக்குத் தமிழ் மீது அதிக நாட்டம்; இலக்கண சாஸ்திரங்கள் அனைத்தையும் எளிதாய்க் கற்று தமிழ் பண்டிதரானார்.

அச்சமயம், வேதாகமக் கல்லூரி ஒன்றிற்கு தமிழ் ஆசிரியர் தேவைப்பட்டதால் அங்கு தம் பணியை ஆரம்பித்தார். ஆனால் கிறிஸ்தவர்களிடம் தொடர்பு கொள்வதை அவர் விரும்பவே இல்லை.

ஒருநாள் ஹக்ஸ்டபிள் என்ற மிஷனெரி ஒரு புதிய ஏற்பாட்டை கிருஷ்ணப்பிள்ளைக்கு கொடுக்கவே, வெறுப்படைந்த அவர் தன் வேலையையும் விட்டுவிட்டார். ஆனாலும் மிஷனெரியின் அன்பு அவரை சிந்திக்க வைத்தது.

அந்நாட்களில் அநேக உயர்குல வாலிபர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் இதயத்தைத் திறந்துக் கொடுத்தனர். அவர்களில் தனக்கோடி ராஜீ என்பவரும் ஒருவர். அவர் கிருஷ்ணபிள்ளைக்கு கிறிஸ்துவின் அன்பைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

ஓர் இரவு, கிருஷ்ணப்பிள்ளையால் தூங்க முடியவில்லை. கிறிஸ்துவைக் குறித்த சிந்தனைகள் உள்ளத்தில் நிறைய ஆரம்பித்தது. இதயம் மெல்லத் திறந்தது. கிறிஸ்துவை தன் உள்ளத்தில் வரவழைத்தார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

தமிழ் பண்டிதரான கிருஷ்ணபிள்ளை, கிறிஸ்துவைப் புகழ்ந்து பாடல்கள் எழுதவும், பாடவும் ஆரம்பித்தார். இரட்சண்ய யாத்ரீகம், இரட்சண்ய மனோகரம் என்ற அரிய நூல்கள் அவர் மூலமாக வெளிவந்தவையே. மாபெரும் மிஷனெரிகளான சர்ஜென்ட், உவாக்கர், ஏமிகார்மைக்கேல்

மற்றும் பலருக்கு தமிழ் கற்றுக்கொடுத்த இவர், 1900-ம் ஆண்டு பிப்ரவரி 3-ம் தேதி இறைவனை புகழ்ந்து பாட விண்ணகம் சென்றார்.

அன்பரே! கிருஷ்ணப்பிள்ளையைப் போன்று இயேசுவை மட்டும் பாடுகிறீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** ஆண்டவர் என் இதயத்தைத் திறந்தார். அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன் - H.A. கிருஷ்ணப்பிள்ளை

**குயவனின் கரங்களில்:** ஆண்டவரே! நீர் தந்த வாழ்வில் நான் உம்மை துதிக்காமல் இருந்தால் எனக்கு நாவு இருந்தும் என்ன பயன்?

**தியானத்திற்கு** : யாத். 9, சங்கீதம் 62-63, ரோமர் 13-14

## எண்கள் ~ தொடர்

### எண் நான்கு:-

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை தெளிவாய் கற்றுத்தரும் நூல்கள் நற்செய்தி நூல்களாகும். நற்செய்தி நூல்கள் நான்கு. அவைகள் 1. மத்தேயு, 2. மாற்கு, 3. லூக்கா, 4. யோவான். புதிய ஏற்பாட்டில் நற்செய்தி என்ற சொல் இயேசு கிறிஸ்துவை குறிக்கும், அவரே உலக இரட்சகர், பாவிகளை மீட்க அவர் உலகில் வந்தார் என்ற செய்தியாகும். நற்செய்தி நூலில் இயேசு நாதரின் பிறப்பு, வளர்ப்பு, அருட்பணி, பாடுகள், சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை உள்ளடங்கியுள்ளன. நான்காம் எண் இந்த உண்மையை கற்றுத் தருகிறது.

### எண் ஐந்து:-

எண் ஐந்து எவைகளைக் கற்றுத் தருகிறது?

**a. திருமறையில் மோசேயின் ஆகமங்கள் என அழைக்கப்படும் நூல்கள் ஐந்து.** அவைகள், 1. ஆதியாகமம், 2. யாத்திராகமம், 3. லேவியராகமம், 4. எண்ணாகமம், 5. உபாகமம் ஆகியவையாகும்.

**b. கூழாங்கல்கள் ஐந்து** (1 சாமுவேல் 17:40):-

தாவீது பெலிஸ்தியனாகிய கோலியாத்தோடு போரிடப் போகும்போது கொண்டு சென்ற பொருள் கூழாங்கல். இது இயற்கையாக கிடைப்பவை. வெற்றி தாவீதுக்கு.

**c. பெதஸ்தா குளத்துக்கு ஐந்து மண்டபங்கள்** (யோவான் 5:2):-

தண்ணீர் எப்போது கலங்கும் என நோயாளிகள் கலக்கத்தோடு காத்திருந்த குளம். தண்ணீர் கலங்கும்போது முதலாவது இறங்கும் நபர் குணமடைவார். இந்த குளத்துக்கு ஐந்து மண்டபங்கள்.

**d. ஐசுவரியவானின் சகோதரர் ஐந்துபேர்** (லூக்கா 16:27):-

செல்வம் படைத்த மனிதன் உலகில் வாழும்போது எவரையும் மதிக்கவில்லை. லாசர் என்ற ஏழை மனிதனை கண்டுகொள்ளவில்லை. இரண்டு பேரும் மரித்தார்கள். லாசர் ஆபிரகாமின் மடியில் அமர்ந்தான். செல்வந்தன் பாதாளத்தில் அகப்பட்டு அழிந்தான். அவனின் 5 சகோதரர்களும் பாதாளத்துக்கு போகாதபடி காத்துக்கொள்ள லாசர்போய் நற்செய்தி சொல்ல கேட்டுக்கொண்டான். வாடும்போது ஏழைகள்மேல் கரிசனை கொள்ளவேண்டும்.

**e. சிறுவன் கையில் இருந்த வாற்கோதுமை அப்பங்கள் 5** (யோவான் 6:9):-

கரிசனையுள்ள அம்மா மகனுக்கு கொடுத்த உணவை எல்லோரும் சாப்பிடக் கொடுத்தான். பெரிய அற்புதம் நடந்தது.

ஐந்தாவது எண் இவைகளைக் கற்றுத் தருகிறது.

(தொடர்ந்து அடுத்த மாத இதழில் பார்க்கலாம்)

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ பிப்ரவரி 2022

| | | |
|---|---|---|
| 04-02-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Paulin Shabila Gnanadhas |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. C. Sujin |
| 11-02-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Percy Jean |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. M. Sujin |
| 18-02-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Saja Arun Paul |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Sujith Gladson |
| 25-01-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sarah Raja Singh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Alex Baskar |
| 02-03-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sathya Priya Ramesh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Anto Kingston |

# மனமேட்டிமை, பெருமையினால் வரும் கேடு

“அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூபபீடத்தின் மேல் தூபங்காட்டக் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான்” (2நாளா 26:16)



கர்த்தருடைய ஆலயத்தில் பணிவிடை செய்வதற்காக ஆரோனின் குடும்பத்தாரை கர்த்தர் நியமித்திருந்தார். ஆனால் உசியா ராஜா பெருமை கொண்டு, கர்த்தருடைய கட்டளையை மீறி, தூபபீடத்தின் மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான். கர்த்தருடைய கோபம் அவன்மேல் திரும்பினபோது, அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று. மட்டுமல்ல, ராஜாவாகிய உசியா மரண நாள்மட்டும் குஷ்டரோகியாயிருந்து, கர்த்தருடைய ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டிருந்தார் என்று வேதம் சொல்லுகிறது (2நாளா 26:21). ஆம், “**பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்**.” (1பேது5:5)

நேபுகாத்நேச்சார் ஒருநாள் மனமேட்டிமையடைந்தார். தான் கட்டின மகா பாபிலோனைப் பார்த்து பெருமையடைந்தார். என் மகிமை பிரஸ்தாபத்திற்கென்று நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா! என்று சொன்னபோது, அந்தப் பெருமையின் விளைவாக கர்த்தரின் நியாயத்தீர்ப்பு அவர் மேல் வந்தது. காட்டு மிருகத்தைப்போல புல் மேய்ந்தார். புத்தி பேதலித்துப் போயிற்று. ஆகாயத்துப் பட்சிகளைப்போல அவருடைய நகங்கள் வளர்ந்தன. வேதம் சொல்லுகிறது, “**அழிவுக்கு முன்னானது அகந்தை: விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை**” (நீதி.16:18)

“இயேசுகிறிஸ்து கீழ்ப்படிந்தவராகி, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் தம்மைத் தாமே தாழ்த்தினார்” (பிலி.2:8). வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சிருஷ்டி கர்த்தரே தம்மைத் தாழ்த்தும்போது, நாம் எவ்வளவு மனத்தாழ்மையுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய உலக ஞானம், அறிவு, பணம், அந்தஸ்து, அதிகாரம், புகழ் இவைகளைக் குறித்து மேன்மைப்பாராட்டி, மனிதநேயத்தை இழக்காமல் இருப்போம். இவைகளைக் குறித்து மனமேட்டிமையடைந்த அநேகர்

தங்களுக்கு தாங்களே கேடுண்டாக்கி, விழுந்துபோனார்கள். “சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மைப் பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்” என்று சொல்லுங்கள் (சங்.20:7)

தேவனுடைய பிள்ளைகளே, “**கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்**”. (யாக். 4:10) நீங்கள் தாழ்மையுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்போது, கர்த்தருடைய கரம் நம்மை மேன்மையாய் உயர்த்தும்.

**- V.G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 104

### பெப்ரவரி 2022 மாத கேள்விகள்

**(1கொரிந்தியர் அதிகாரம் 10 முதல் 2கொரிந்தியர் 3 முடிய)**

1. பவுல் எதை தேடவில்லை?
2. ஜீவாத்துமாவானது யார்?
3. இருதயங்களில் எதைக் கொடுத்திருக்கிறார்?
4. எது சத்தியத்தில் சந்தோஷப்படும்?
5. கொல்லுவது எது?
6. உயிர்த்தெழுந்த கிறிஸ்து முதலாவது யாருக்கு தரிசனமானார்?
7. போஜனம்பண்ணக் கூடி வரும்போது யாருக்காக காத்திருங்கள்?
8. தேவன் எதற்கு தேவனாயிருக்கிறார்?
9. தேவ வசனத்தை கலப்பாய் பேசாமல் எங்கு பேசுகிறோம்?
10. எதற்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை?
11. மரித்தோரை எழுப்புகிற தேவன் எங்களை தப்புவித்தார், தப்புவிக்கிறார், தப்புவிப்பார் எனக் கூறியது யார்?
12. அன்பு, விசுவாசம், நம்பிக்கை இவைகளில் பெரியது எது?
13. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு எது?
14. ஒரே நாளில் எத்தனை பேர் விழுந்துபோனார்கள்?
15. யாரால் மோசம் போகாதபடிக்கு அப்படி செய்தேன் என பவுல் கூறுகிறார்?
16. பாவத்தின் பலன் எது?

17. மயிரை நீளமாய் வளர்ப்பது யாருக்கு கனவீனமாயிருக்கும்?
18. எது வாசிக்கப்படும்போது முக்காடு இஸ்ரவேலரின் இருதயத்தில் இருக்கிறது?
19. கருத்தோடே எத்தனை வார்த்தைகள் பேசுவது பவுலுக்கு அதிக விருப்பமாயிருக்கும்?
20. அநேக அவயவங்களாயிருப்பது எது?

## ஜனவரி 2022 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. துர்க்குணம், பொல்லாப்பு – 1கொரி. 5:8
2. ஜென்ம சுபாவமான மனுஷன் - 1கொரி. 2:14
3. முத்திரையாய் - 1கொரி. 9:2
4. பிரசங்கம் - 1கொரி. 1:21
5. தன் புருஷனால் - 1கொரி. 7:14
6. தூஷிக்கப்பட்டு – 1கொரி. 4:13
7. பலவீனமுள்ள சகோதரன் - 1கொரி. 8:11
8. தேவனுடைய ஆவி – 1கொரி. 3:16
9. வேசித்தனம் - 1கொரி. 6:18
10. அழிவுள்ள கிரீடம் - 1கொரி. 9:25
11. புறம்பே இருக்கிறவர்கள் - 1கொரி. 5:13
12. கிரேக்கர் - 1கொரி. 1:22
13. கன்னிகைகள் - 1கொரி. 7:25
14. தேவனுடையவர் - 1கொரி. 3:23
15. விக்கிரகத்தை – 1கொரி. 8:7
16. சரீரம் - 1கொரி. 6:19
17. தேவ ஞானத்தை – 1கொரி. 2:7,8
18. பெலத்தில் - 1கொரி. 4:20
19. தேவனுடைய சபை – 1கொரி. 1:2
20. பவுல், அப்பொல்லோ – 1கொரி. 3:5,9

## ஜனவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Manju Martin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Percy Jean | Mrs. Virgin Jegatha Jino |

## பெப்ரவரி 2022 மாத கேள்விகள்

### (எரேமியா அதிகாரம் 33 முதல் 42 முடிய)

1. கர்த்தர் யாரை வர்த்திக்கப்பண்ணுவார்?
2. என் உக்கிரம், நீங்கள் எகிப்துக்கு போகும்போது உங்கள்மேல் மூளும் என கர்த்தர் யாரைப் பார்த்து கூறும்படி சொல்கிறார்?
3. எகிப்து தேசம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
4. நகரத்து மதிலில் எப்போது திறப்பு கண்டது?
5. ராஜ வம்சத்தில் பிறந்தவன் யார்?
6. காவற்கூடமாய் இருந்தது எது?
7. ரேகாபியர் யாருடைய இராணுவங்களுக்கு தப்பும்படி எருசலேமுக்கு வந்தார்கள்?
8. நான் அடைக்கப்பட்டவன். யார் யாரிடம் கூறியது?
9. எரேமியாவை விடுதலையாக்கினவன் யார்?
10. எரேமியாவை துரவிலிருந்து எடுத்துவிட்டது யார்?
11. அப்பத்தாழ்ச்சியினால் பட்டினியாயிராத தேசம் என்று கூறப்பட்டுள்ளது எது?
12. நாட்கள் வரும்போது இரட்சிக்கப்படுவது எது?
13. ஜனத்தின் நடுவே ஜாடையாய் விலகியது யார்?
14. மீந்திருந்த பத்துபேர் தங்களுக்கு நிலத்தின் கீழ் எது இருந்ததாக கூறினார்கள்?
15. யூதாவின் அரணிப்பான பட்டணங்களில் மீந்திருந்தவை எவை?
16. கர்த்தருடைய வார்த்தைக்கு சிதேக்கியா செவிகொடுக்கும்போது பிழைப்பது எது?
17. நீ பொய் சொல்கிறாய். யார் யாரிடம் கூறியது?
18. வயல்வெளியின் வழியே போய்விட்டவன் யார்?
19. இரவின் குளிருக்கு எறிந்து விடப்படுவது எது?
20. சுருளில் எழுதின கர்த்தருடைய வார்த்தையை எந்த நாளில் வாசிக்க வேண்டும்?

## ஜனவரி 2022 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. இஸ்ரவேல் சந்ததி – எரேமியா 31:36
2. அனனியா – எரேமியா 28:16,17
3. பட்டயம், பஞ்சம், கொள்ளைநோய் - எரேமியா 32:36
4. மொரேசா – எரேமியா 26:18
5. தராசில் - எரேமியா 32:10
6. யூதா – எரேமியா 24:8
7. நேபுகாத்நேச்சார் - எரேமியா 29:3
8. பூமியின் எல்லைகள் - எரேமியா 25:32
9. எப்பிராயீம் - எரேமியா 31:20
10. ஆணாய்ப் பிறந்தவன் - எரேமியா 30:6
11. கயிறு, நுகம் - எரேமியா 27:2
12. இஸ்ரவேல் & யூதா புத்திரர் - எரேமியா 32:32
13. செமாயா – எரேமியா 29:31
14. நல்ல அத்திப்பழங்களுக்கு – எரேமியா 24:5
15. எரேமியா 31:3
16. 23 – எரேமியா 25:3
17. கோராவாரிக் காற்று – எரேமியா 30:23
18. ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள், ஜனங்கள் - எரேமியா 26:8
19. இருப்பு நுகம் - எரேமியா 28:13
20. திராட்சக் காய்கள் - எரேமியா 31:29

## ஜனவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| |
|---|
| Mr. Alex Baskar |
| Mr. Bejo Nelson |
| Mr. Justus Martin |
| Mr. Ramesh R. |
| Mr. Robin Devadhas |
| Mr. Sujith Gladson |

## May God Bless All

## Birthday Celebrants – February 2022

| | |
|---|---|
| 01st Feb | Master. Devarsh Ruban, S/o Mr. Atheesh |
| 01st Feb | Master. Winfred Sharon, S/o Mr. Winson |
| 11th Feb | Mr. Nalam Dimalson |
| 12th Feb | Mrs. Neethu, W/o Mr. Bino Vetha Raja Sing |
| 12th Feb | Miss. Shirley Susan, D/o Mr. Isaac Solomon |
| 12th Feb | Master. A.S. Asher Juish Bension, S/o Mr. Arun Paul |
| 14th Feb | Mr. Jenkin Raj |
| 14th Feb | Miss. Angeline, D/o Mr. T. Raju |
| 14th Feb | Miss. Jessica, D/o Mr. T. Raju |
| 15th Feb | Miss. Herlin Reeba, D/o Mr. Herbert |
| 16th Feb | Miss. Tanisa, D/o Mr. Ramesh |
| 16th Feb | Mrs. Boopathi, W/o Mr. Baskar |
| 16th Feb | Mr. Anto Kingston |
| 16th Feb | Miss. Christilin Vijisha, D/o Mr. Jino John |
| 18th Feb | Mr. Venil Sing |
| 19th Feb | Mr. S. Kannan |
| 20th Feb | Miss. Riana Aharin, D/o Mr. Nalam Dimalson |
| 21st Feb | Miss. Lindsy R. Macedo, D/o Mr. Rex Macedo |
| 21st Feb | Miss. Zaralin Pius Justa, D/o Mr. Vinolin |
| 22nd Feb | Mrs. Vanitha Rani, W/o Mr. J.P. Prince. |
| 23rd Feb | Mrs. Femila Berin, W/o Mr. Berin Raja |
| 24th Feb | Mr. Berin Raja |
| 25th Feb | Miss. Esther Natasha, D/o P. Satheesh Kumar |
| 25th Feb | Miss. B. N. Mahima, D/o Mr. Bino Vetha Raja Sing |
| 26th Feb | Miss. A. Beryl Ida, D/o Mr. D. Ahigen Paul |
| 28th Feb | Mr. Edward Sam |
| 29th Feb | Miss. Liyana Jeshu, D/O Mr. Livingston |

## Wedding Day Anniversaries – February 2022

| | |
|---|---|
| 04th Feb | Mr. Gobinath & Mrs. Mary Praveena |
| 09th Feb | Mr. Bino Vetha Raja Sing & Mrs. Neethu |
| 14th Feb | Mr. Ramesh & Mrs. Sathya Priya |
| 20th Feb | Mr. Johnson Raj & Mrs. Thamari |
| 21st Feb | Mr. Johan Pratheep & Mrs. Shiney |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.
5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.
5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு மத சார்பின்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.
2. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.
3. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.
4. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.
2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.
3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.
4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.
5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# அனுதின மன்னா – பிப்ரவரி 2022

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| பிப்ரவரி 1 | செவ்வாய் | சங். 46:1-11 | சங். 46:11 | லேவி. 12-14 |
| பிப்ரவரி 2 | புதன் | ஓசியா 12:1-6 | ஓசியா 12:5 | லேவி. 15-17 |
| பிப்ரவரி 3 | வியாழன் | ஆமோஸ் 5:1-14 | ஆமோஸ் 5:4 | லேவி. 18-20 |
| **பிப்ரவரி 4** | **வெள்ளி** | **யோனா 2:1-10** | **யோனா 2:9** | **லேவி. 21-23** |
| பிப்ரவரி 5 | சனி | எபிரெயர் 6:9-20 | எபிரெயர் 6:14 | லேவி. 24-25 |
| பிப்ரவரி 6 | ஞாயிறு | எசேக். 20:37-44 | எசேக். 20:44 | லேவி. 26-27 |
| பிப்ரவரி 7 | திங்கள் | உபா. 15:5-11 | உபாகமம் 15:6 | எண். 1-2 |
| பிப்ரவரி 8 | செவ்வாய் | யாத். 14:13-22 | யாத். 14:14 | எண். 3-4 |
| பிப்ரவரி 9 | புதன் | சங்கீதம் 16:1-6 | சங்கீதம் 16:6 | எண். 5-6 |
| பிப்ரவரி 10 | வியாழன் | யாத். 23:12-33 | யாத். 23:25 | எண். 7-8 |
| **பிப்ரவரி 11** | **வெள்ளி** | **உபா. 15:1-10** | **உபா. 15:5** | **எண். 9-11** |
| பிப்ரவரி 12 | சனி | மத்தேயு 5:39-48 | மத்தேயு 5:44 | எண். 12-14 |
| பிப்ரவரி 13 | ஞாயிறு | மத்தேயு 9:18-33 | மத்தேயு 9:22 | எண். 15-17 |
| பிப்ரவரி 14 | திங்கள் | யோவான் 14:1-13 | யோவான் 14:13 | எண். 18-20 |
| பிப்ரவரி 15 | செவ்வாய் | மத்தேயு 6:1-21 | மத்தேயு 6:6 | எண். 21-23 |
| பிப்ரவரி 16 | புதன் | யோவான் 16:1-20 | யோவான் 16:20 | எண். 24-26 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜனவரி 17 | திங்கள் | யோவா. 14:1-15 | யோவா. 14:14 | யாத். 1-4 |
| ஜனவரி 18 | செவ்வாய் | யோவா. 15:1-17 | யோவா. 15:7 | யாத். 5-7 |
| ஜனவரி 19 | புதன் | ஏசாயா 49:8-18 | ஏசாயா 49:15 | யாத். 8-10 |
| ஜனவரி 20 | வியாழன் | ஏசாயா 46:1-13 | ஏசாயா 46:4 | யாத். 11-13 |
| **ஜனவரி 21** | **வெள்ளி** | **சங். 127:1-5** | **சங். 127:5** | **யாத். 14-16** |
| ஜனவரி 22 | சனி | சங். 111:1-10 | சங். 111:10 | யாத். 17-20 |
| ஜனவரி 23 | ஞாயிறு | நீதி. 29:1-13 | நீதி. 29:1 | யாத். 21-23 |
| ஜனவரி 24 | திங்கள் | நீதி. 6:6-19 | நீதி. 6:6 | யாத். 24-27 |
| ஜனவரி 25 | செவ்வாய் | யோபு 9:1-20 | யோபு 9:10 | யாத். 28-30 |
| ஜனவரி 26 | புதன் | யோபு 19:1-25 | யோபு 19:25 | யாத். 31-34 |
| ஜனவரி 27 | வியாழன் | 2நாளா.33:10-17 | 2நாளா. 33:13 | யாத். 35-37 |
| **ஜனவரி 28** | **வெள்ளி** | **1நாளா.29:10-19** | **1நாளா. 29:12** | **யாத். 38-40** |
| ஜனவரி 29 | சனி | 2இராஜா. 4:1-7 | 2இராஜா. 4:7 | லேவி. 1-4 |
| ஜனவரி 30 | ஞாயிறு | உபா. 28:1-14 | உபா. 28:6 | லேவி. 5-7 |
| ஜனவரி 31 | திங்கள் | உபா. 9:11-20 | உபா. 9:18 | லேவி. 8-11 |
| பிப்ரவரி 1 | செவ்வாய் | சங். 46:1-11 | சங். 46:11 | லேவி. 12-14 |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. S. Bovas**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : pastor@csitamilchurchoman.org**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**